# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.46/2024

PW2–மாரிமுத்து நாள்.18.02.2026

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னுடைய சொந்தஊர் பூலாம்பாடி. அங்கு எனக்கு நிலம், வீடு உள்ளது. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதியை எனக்கு நன்கு தெரியும். யார் மீது வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த அம்மா பெயர் தெரியாது. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி சொல்லி சாட்சியம் அளிக்க வந்தேன். வாதி என்ன சொல்ல சொன்னார் என்றால் நானாக தெரிந்த விசயத்தை சொல்கிறேன். வாதி என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. வாதி, பிரதிவாதி வீட்டிற்கு நடு வீதியில் நான் குடியிருக்கிறேன். எனக்கு இரண்டு குழந்தைகள். வாதிக்கு இரண்டு மகன்கள். நான் 10வருடத்திற்கு முன்பு கவுன்சிலராக இருந்தேன். அப்போது வாதி தலைவராக இல்லை. வாதி பூலாம்பாடி பேருராட்சியில் பதவியில் இருந்தது இல்லை. வாதி அண்ணா திமுக கட்சியில் நகர செயலாளராக இருந்தார். நான் காங்கிரஸ் கட்சியின் மாவட்ட துணைசெயலாளராக இருக்கிறேன். எனக்கும் வாதிக்கும் அரசியல் ரீதியாக நல்ல நட்பு என்றால் சரியல்ல. எனக்கு 61 வயதாகிறது. வாதிக்கு என்ன வயது என்று எனக்கு தெரியாது. வாதி பொதுபதவியில் பேருராட்சியில் இருந்தது கிடையாது என்றால் சரிதான். சொசைட்டியில் இருந்துள்ளார். பூலாம்பாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் தலைவராக இருந்தார். பிரதிவாதி புகார் கொடுப்பதற்கு முன்னர் வாதி 3 பதவிகளில் இருந்தார். சொசைட்டி தலைவர், நகர செயலாளர் மற்றும் ஒருபள்ளியில் மாணவர் சேர்க்கை பிரிவில் தலைவராக இருந்தார். பிரதிவாதி புகார் கொடுப்பதற்கு முன்னர் மேற்படி பதவிகளில் இருந்தார். அதன்பின்னர் அவர் வேறு பதவிகளுக்கு போகவில்லை. பிரதிவாதி ஜனவரி 2022ம் மாதத்தில் புகார் கொடுத்தார். தேதி எனக்கு தெரியவில்லை. நான் அப்போது வயக்காட்டு வீட்டில் இருந்தேன். நான் நடுவீதியில் குடியிருக்கிறேன் என்று தவறாக சொன்னேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த போது நான் எங்கிருந்தேன் என்று தற்போது என்னால் கூறஇயலாது. பிரதிவாதி பொய்யாக என்ன புகார் கொடுத்தார் என்றால் வாதி பாலியல் தொல்லை செய்ததாக கொடுத்தார். அந்த புகார் கொடுத்த அன்றே விவரம் தெரியும். காலை 06.00 மணியளவில் நான் டீ கடையில் இருக்கும்போது அம்மாதிரி புகார் கொடுத்ததாக சொன்னார்கள். நான் சொல்லும் பாலியல் தொல்லை எப்போது நடந்தது என்று எனக்கு தெரியாது. பேப்பரில் வந்தபின்னர் தான் தெரியும். வாதி பிரதிவாதிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாகவும் அவரை கைது செய்துள்ளதாகவும் பேப்பரில் வந்தது. அதை

மட்டும் தான் படித்தேன். டிவியிலும் வந்தது. எந்த டிவி என்று ஞாபகமில்லை. பூலாம்பாடியை சேர்ந்த வாதி பிரதிவாதிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக டிவியிலும் செய்தி வந்தது. அதை தவிர வேறு வாதி பற்றி வரவில்லை. குற்றவியல் வழக்கில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. அந்த வழக்கில் வாதி விடுதலை ஆகிவிட்டார் என்று சொன்னார்கள். அவ்வாறு மக்கள் பேசிகொண்டார்கள். குறிப்பிட்டு யார் என்று சொல்லஇயலாது. நான் சொந்த விவசாயம் செய்கிறேன். வாதி மான நஷ்ட ஈடு கோரி இந்த வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். இந்த விவரத்தை வாதி எனக்கு சொன்னார். 4, 5 மாதங்களுக்கு முன்பு சொன்னார். வாதி என்னை சாட்சி சொல்ல அழைத்தாரா என்றால் நானே வருகிறேன் என்று சொன்னேன். பிரதிவாதியின் கணவர் இறந்துவிட்டார். பிரதிவாதியின் கணவர் 4, 5 வருடங்களாக படுத்த படுக்கையாக இருந்தார். அவரை நான் பார்க்கவில்லை. அவர் லாரி டிரைவராக வேலைசெய்தார் என்று சொன்னார்கள். அதுபற்றி நேரடியாக தெரியாது. பிரதிவாதி குடும்பத்தில் என்ன நடக்கிறது என்று எனக்கு நேரடியாக தெரியாது. பூலாம்பாடி ஒரு சிறிய கிராமம் என்றால் பேருராட்சி ஆகும். பிரதிவாதி சிலிண்டர் ஆபிஸ் நடத்தி வருகிறார். வாதி பெட்ரோல் பங்க் வைத்துள்ளார். ஏஜென்சி பிசினஸ் செய்கிறார். வாதி கேஸ் ஏஜென்சி எடுக்க முயற்சி செய்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி எப்போது கேஸ்ஏஜென்சி எடுத்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே கேஸ்ஏஜென்சி எடுப்பது சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் எனக்கு தெரியாது. கேஸ்ஏஜென்சி சேவையில் குறைபாடு உள்ளது என்று வாதி புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதற்கு பதிலாகதான் பிரதிவாதி புகார் கொடுத்தார் என்று வாதி என்னிடம் சொன்னார். மேற்படி புகார் கொடுத்தவிவரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. இந்த விவரம் வாதி சொல்லி தான் தெரியும். வாதி மீது ஊரில் 2, 3 குற்றவியல் மற்றும் சிவில் வழக்குகள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அதுசம்மந்தமாக ஊரில் யாரும் பேசிக்கொள்ளவில்லை. வாதி அரசுபணி வாங்கி தருவதாக சொல்லி ஏமாற்றி விட்டார் என்று அவர் மீது வழக்கு உள்ளதா என்று எனக்கு தெரியாது. வாதி எனக்கு எவ்வளவு நாட்களாக பழக்கம் என்றால் அவரை சிறுவயது முதலே தெரியும். சுமார் 20 ஆண்டுகளாக பழக்கம். 20ஆண்டுகளுக்கு முன்பு அவர் வயலுக்கு ஏர் பிடிக்க போனேன். இப்போது மேற்படி வேலைக்கு செல்லவில்லை. கடந்த 10, 15 வருடங்களாக நான் மற்ற வயல்களுக்கு வேலைக்கு செல்வதில்லை. வாதியின் வயல் அருகில் பிரதிவாதியின் வயல் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் நிலத்தின் ஒருபகுதியை வாதியின் தகப்பனார் கிரயம் வாங்கியுள்ளரா என்று எனக்கு தெரியாது. மீதி நிலத்தை வாதி கிரயம் கேட்டார் என்றால் எனக்கு தெரியாது.

அது சம்மந்தமாக அவர்களுக்குள் பிரச்சனை இருந்தது என்றால் எனக்கு தெரியாது. வாதியை கட்சியில் இருந்து ஜனவரி மாதம் 2022வருடம் நீக்கினார்கள். தேதி சொல்லஇயலாது. பிரதிவாதி கொடுத்தபுகாருக்காக வாதியை கட்சியில் நீக்கவில்லை என்றும், வேறு காரணத்திறகாக நீக்கப்பட்டார் என்றால் சரியல்ல. வாதி ஊரில் வசதியான நபர் என்பதால் அவரோடு நட்பாக இருந்தால் நல்ல எதிர்காலம் இருக்கும் என்பதால் நான் அவருக்கு ஆதராவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ளது போன்று எந்த சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.